தினமணி

**"பயிர் காப்பீடு செய்யுங்கள்'**

First Published : 22 Jul 2011 03:21:06 PM IST

செய்யாறு, ஜூலை 21: செய்யாறு வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் பயிரை காப்பீடு செய்யுமாறு செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

செய்யாறு வட்டாரத்தில் நெல், மணிலா, உளுந்து ஆகியவற்றை சாகுபடி செய்யும் விவசாயிகள், இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் நஷ்டத்தை போக்க பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம்.

விண்ணப்பப் படிவங்களை அந்தந்தப் பகுதிகளில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் மூலம் பெறலாம். கீழே குறிப்பிட்டுள்ளவாறு பிரிமியத் தொகையை, அப்பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் செலுத்தி பதிவு செய்துகொள்ள வேண்டும்.

மானாவாரி மணிலா: செய்யாறு வடதண்டலம் வாக்கடையில் உள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.86 பிரிமியத் தொகையை செலுத்தினால் ரூ.27,330 வரை இழப்பீட்டுத் தொகை கிடைக்கும். பிரிமியம் கட்ட கடைசித் தேதி 15.9.11.

உளுந்து: செய்யாறு பகுதியில் உள்ள விவசாயிகள் மட்டும் ஏக்கருக்கு ரூ.17 பிரிமியத் தொகையை செலுத்தினால் ரூ.7,470 வரை இழப்பீட்டுத் தொகை கிடைக்கும். பிரிமியம் கட்ட கடைசித் தேதி 15.9.11.

சம்பா நெல்: செய்யாறு பகுதியில் உள்ள விவசாயிகள் மட்டும் ஏக்கருக்கு ரூ.37.50 பிரிமியத் தொகையை செலுத்தினால் ரூ.20,810 வரை இழப்பீட்டுத் தொகை கிடைக்கும்.

**விதை உற்பத்தியில் கூடுதல் வருவாய் ஈட்ட விவசாயிகளுக்கு யோசனை**

First Published : 22 Jul 2011 02:38:28 PM IST

தஞ்சாவூர், ஜூலை 21: விவசாயிகள் நேரடியாக விதை உற்பத்தி செய்வதன் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டலாம் என்று மண், நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பா. சந்திரசேகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு தரமான விதையுடன் கூடிய நவீன தொழில்நுட்பம் அவசியமானது. ஆனால், பெரும்பாலான விவசாயிகள் தங்கள் நிலத்தில் அறுவடை செய்து

கிடைத்த நெல்லையே விதையாக உபயோகித்து வருவதால், சுமார் 15 முதல் 20 சதவீத மகசூல் குறைகிறது. எனவே, விவசாயிகள் விதை உற்பத்தியில் ஈடுபட்டால் கூடுதல் மகசூலும், வருவாயும் கிடைக்கும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண்மைத் துறைகளில் விதை உற்பத்திக்கு தேவையான சான்று விதைகள் கிடைக்கின்றன. புதிய நடவு முறை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, களை மற்றும் நீர் மேலாண்மை ஆகியவற்றின் நவீன தொழில்நுட்பங்களையும் விவசாயிகள் அறிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும்.

பசுந்தாள் உரங்களான தக்கைப்பூண்டு, காவளை, மணிலா அகத்தி ஆகியவற்றை வயலில் வளர்த்து பூப்பதற்கு முன்பாக உழுதுவிடுவதால் வயலில் உரம் தங்கும்.

இதுபோன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதால் கூடுதல் மகசூல் கிடைக்கப் பெறலாம்.

**முட்டை விலை**

First Published : 22 Jul 2011 10:02:28 AM IST

நாமக்கல், ஜூலை 21: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ. 2.37, சென்னையில்
ரூ. 2.50.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்
முதல் விலை கிலோ ரூ. 47, முட்டைக் கோழி கிலோ ரூ. 38.

**டிஏபி உரம் தட்டுப்பாடு: தனியார் கடையில் கூடுதல் விலைக்கு விற்பதாக புகார்**

First Published : 22 Jul 2011 10:13:32 AM IST

கிருஷ்ணகிரி, ஜூலை 21: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு இல்லாததால் டிஏபி உரத்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

÷தட்டுப்பாடு காரணமாக தனியார் கடைகளில் டிஏபி உரம் ஆயிரம் ரூபாய் வரை கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

÷வழக்கத்துக்கு மாறாக நடப்பாண்டில் விவசாயிகளின் நலன் கருதி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்களில் பாசன நீர் உரிய காலத்தில் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் நாற்று விதைப்பு பணி முடிந்து, நாற்றுகள் நடவும் பணியில்
ஈடுபட்டுள்ளனர்.

÷இப்போது விவசாயிகள் நெல் சாகுபடி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும் நிலையில் கூட்டுறவு சங்கங்களில் டிஏபி உரம் இருப்பு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 9 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படும். இதற்கு ஆயிரம் டன் டிஏபி உரம் தேவைப்படுகிறது. ஆனால் கடந்த இரு மாதங்களாக மாவட்டத்தில் இருப்பு இல்லை என வேளாண்மை துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

÷கிருஷ்ணகிரி அருகே உள்ள அவதானப்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் அதிகமாக நெல் பயிரை சாகுபடி செய்கின்றனர். இவர்கள் அப்பகுதியில் உள்ள பெரியமுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில்தான் டிஏபி உரங்களை வாங்குவது வழக்கம். ஆனால் கடந்த இரு மாதங்களாவே இக்கூட்டுறவு சங்கத்தில் டிஏபி உரம் இருப்பு இல்லை. இதுகுறித்து விவரங்கள், சங்கக் கட்டத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் உரம் இருப்பு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே நிலைதான் கூட்டுறவு சங்கங்களில் நிலவுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் தனியார் உரக்கடைகளில் கடந்த வாரம் ரூ.630-க்கு விற்பனை செய்யப்பட்ட டிஏபி உரம் இப்போது ரூ.696 என்ற விலைக்கு விற்கப்படுகின்றன.

÷உரத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் சில தனியார் உரக்கடைகளில் ரசீது இல்லாமல் ரூ 1000-ம் விலைக்கு உரம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் கூட்டுறவு சங்கங்களில் உரத்தின் இருப்பு நிலையை அறிய மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டம் அறிவிப்பு: கிருஷ்ணகிரி, மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நிலவும் உரத் தட்டுப்பாட்டை போக்க வலியுறுத்தியும், மாவட்ட நிர்வாகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கிருஷ்ணகிரியில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் முன்பு இம்மாதம் 27-ம் தேதி போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட உள்ளதாக தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலர் இராமகவுண்டர் தெரிவித்தார்.

**தக்காளி, கத்தரி கிலோ ரூ.5**

First Published : 22 Jul 2011 10:17:03 AM IST

தருமபுரி, ஜூலை 21: தருமபுரி உழவர் சந்தையில் தக்காளி, கத்தரி ஆகியவற்றின் சில்லரை விலையில் வியாழக்கிழமை சரிவு ஏற்பட்டுள்ளது.

முக்கிய காய்கறி விலையின் சில்லரை விலை (கிலோவுக்கு, ரூபாயில்) விவரம்: தக்காளி 5, கத்தரி 5, வெண்டை 12, அவரை 12, பூசனி 5, பாகற்காய் 16, பீர்க்கங்காய் 12, கேரட் 31, பீட்ரூட் 16, நூல்கோல் 24, பீன்ஸ் 14, முட்டைகோஸ் 7, பச்சை மிளகாய்-24, குடை மிளகாய் 34, பச்சை பட்டாணி 86, காலிபிளவர் 14, கோவைக்காய்-17, உருளைக்கிழங்கு 17, சேனைக்கிழங்கு 36, சேப்பங்கிழங்கு 29, பெரிய வெங்காயம் 19, சின்ன வெங்காயம் 19, பூண்டு 86, இஞ்சி 42.

---

**வேளாண்மை செம்மல் விருது**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,02:14 IST

கோவை : நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக அளவில் வேளாண் பொருட்களை உற்பத்தி செய்த, விவசாயிகள் ஐந்து பேருக்கு வேளாண்மை செம்மல் விருது வழங்கப்பட்டது. நம்தேசத்தின் உணவுத்தேவையை பூர்த்தி செய்யும் பணியில் சாதனைகள் புரிந்து வரும் விவசாய துறையிலும் புதிய தொழில் நுட்பங்களின் பங்கு கணிசமானது.
மேம்படுத்தப்பட்ட நீர் நுட்பவியல் தொழில் நுட்பங்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களில் அதிக விளைச்சல், மானாவாரி வேளாண்மை, பண்ணை இயந்திர பயன்பாடு ஆகிய துறைகளில் சாதனை செய்த விவசாயிகள்
5 பேருக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் நிறுவனம் இணைந்து, "வேளாண்மை செம்மல் விருது' வழங்கின. தமிழகத்தில் உள்ள 30 வேளாண் அறிவியல் மையங்கள் மூலம் விண்ப்பங்கள் வினியோகிக்கப்பட்டு, 150 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் போத்திராஜ் (ராமநாதபுரம்), துரைசாமி (கரூர்) , அருள் மைக்கேல் ஹென்றி (கன்னியகுமரி), மேகநாதன் (திருவாரூர்), மருதநாயகம் (மதுரை) ஆகியோர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர். வேளாண் துறை அமைச்சர் செங்கோட்டையன் விருதுகளை விழங்கினார்.

**கரும்பில் செம்மை சாகுபடி : ஐப்பசியில் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,00:55 IST

குஜிலியம்பாறை : கரும்பு சாகுபடியில் கணு பருக்கள் மூலம், செம்மை முறை சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகள் காலம் காலமாக, விதை கரும்பில் இருந்து, கரும்பு கணுக்களை அரை அடி உயரத்திற்கு வெட்டி நடவு செய்து வந்தனர். ஒரு ஏக்கருக்கு 4-5 டன் விதை கரும்பு தேவைப்பட்டதால், மூலதன செலவு கூடுதலாக இருந்தது. இம்முறைக்கு விடை கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்பான "செம்மை கரும்பு' சாகுபடி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. செம்மை நெல் சாகுபடியை போல, குறைந்த அளவு "கணு பருக்களை' கொண்டு விதைப்பு செய்யப்படுகிறது. கரும்பு கணுக்களில், விரல் நுனி அளவில் வளர்ந்திருக்கும் கணுக்களை பட்டையுடன் வெட்டி எடுத்து, தென் னை நார் கழிவுகளை பரப்பி, நாற்றங்கால் அமைக்க வேண்டும். இதில் தண்ணீர் தெளித்து வர, 30-35 நாட்களுக்குள் நாற்று தயார்.

இம்முறையில் 50 கிலோ நாற்று இருந்தால், ஒரு ஏக்கர் பயிரிடலாம். வரிசைக்கு 5 அடி, பயிருக்கு 2 அடி இடைவெளி விடவேண்டும். இந்த இடைவெளிகளில் முதல் மூன்று மாதங்களுக்கு தர்பூசணி, வெங்காயம், வெள்ளரி பயிரிடலாம். ஒரு கணுவில், 15-20 சிம்புகள் வெடித்து தூர் பெரிதாகும். ஒரு கணு பருவில் இருந்து 30 கிலோ வரை கரும்பு கிடைப்பதால், ஒரு ஏக்கரில் 150 டன் மகசூல் கிடைக்கும். இந்த முறையில் கரும் பை, 6-7 முறை வரை, மறுதாம்பு விடலாம். புரட்டாசி, ஐப்பசியில் இத்திட்டம், தமிழக அளவில் அறிமுகமாகிறது.

முதல் கட்டமாக உழவர் பயிற்சி நிலைய அமைப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக, வேளாண் இணை இயக்குனர் கணேசன், துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தனர். விவசாயிகள், அந்தந்த பகுதி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம் என, வேளாண் அலுவலர் ரவிபாரதி தெரிவித்தார்.

**கரும்பு விவசாயம் பயனில்லாததால் பெரியகுளத்தில் மக்காச்சோளத்திற்கு மாற்றம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,01:08 IST

பெரியகுளம் : பெரியகுளம் சுற்றுப்பகுதியை சேர்ந்த கரும்புவிவசாயிகள் மக்காச்சோளம் விவசாயத்திற்கு மாறியுள்ளனர்.

கரும்பின் விலை உயர்வதும், குறைவதும் விவசாயிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது. இதனால் சராசரியாக 5 ஏக்கர் கரும்பு விவசாயம் செய்த விவசாயிகள் 3 ஏக்கரில் மக்காச்சோளம் பயிர் செய்துள்ளனர். கரும்பு ஒரு ஆண்டு பயிராகும். ஒரு ஏக்கருக்கு 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. கரும்பு அறுவடையின் போது விலை இருந்தால் விவசாயிகளுக்கு ஓரளவிற்கு லாபமும், விலை குறைந்தால் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு வந்தது.

இவர்களுக்கு மாற்றுப்பயிராக மக்காச்சோளம் சாகுபடி கைகொடுத்துள்ளது. மக்காச்சோளம் 120 நாட்கள் பயிராகும், ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. இருந்தபோதிலும் மக்காச்சோளம் பயன்பாடுகள் அதிகரித்துள்ளது.

கான்பிளாக்ஸ், ஓட்ஸ், பிஸ்கட், கோழிதீவனங்கள் உட்பட பலதரப்பட்ட பொருட்களுக்கு மக்காச்சோளம் மூலப்பொருட்களாக அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. மக்காச்சோள வியாபாரிகள், அறுவடை காலத்தில் தோட்டத்திற்கு நேரடியாக சென்று கொள்முதல் செய்கின்றனர். தற்போது மக்காச்சோளம் குவிண்டல் 1150 ரூபாய் முதல் 1250 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

**"மழை நீர் சேகரிப்பு திட்டம்' தீவிரப்படுத்த எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,00:54 IST

சேலம் : தமிழகத்தில் கிடப்பில் போடப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு திட்டத்தை, மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க., அரசு தீவிரப்படுத்த வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். தமிழகத்தில் கடந்த 2001-06ம் ஆண்டு அ.தி.மு.க., ஆட்சிக்காலத்தில், கடும் வறட்சி ஏற்பட்டு, நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. தண்ணீர் பஞ்சத்தால் பொதுமக்களும், விவசாயிகளும் கடும் பாதிப்புக்கு உள்ளாகினர். கடும் தண்ணீர் பஞ்சத்தை போக்க, தமிழக அரசு ஆலோசனை நடத்தியது. மாநிலம் முழுவதும் உள்ள மத்திய, மாநில அரசு அலுவலகம், தனியார் தொழிற்சாலைகள், கடை, நிறுவனம், பொதுமக்கள் வசிக்கும் வீடு என அனைத்து கட்டிடங்களிலும் "மழை நீர் சேகரிப்பு' திட்டத்தை தீவிரமாக அமல்படுத்த உத்தரவிட்டது. மாநில அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தினர் மழை நீர் சேகரிப்பு திட்டத்தை பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, வெற்றிகரமாக செயல்படுத்தினர். இதனால், மாநிலம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. நிலத்தடி நீர் அதிகரிப்பு மூலம், ஓரளவு தண்ணீர் பஞ்சமின்றி மக்கள் வாழ வழிவகை ஏற்பட்டது. கடந்த, 2006ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால், மழை நீர் சேகரிப்பு திட்டம் கிடப்பில் போடப்பட்டது. அரசு மெத்தனம் காட்டியதால், மழை நீர் சேகரிப்பு திட்டத்தை அமல்படுத்தியவர்கள் தொடர்ந்து பராமரிக்காமல் விட்டு விட்டனர். வீடு வீடுக்கும், கடை, நிறுவனம், தொழிற் நிறுவனங்கள், அரசு அலுவலகங்களில் இருந்த மழை நீர் சேகரிப்பு தொட்டி, இருந்த இடம் தெரியாத நிலைக்கு மாறியது. மீண்டும் அ.தி.மு.க., அரசு பொறுப்பேற்றுள்ளதால், மழை நீர் சேகரிப்பு திட்டத்தை அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**பால், இறைச்சி பொருள் தயாரிப்பு சான்றிதழ் படிப்பு: விண்ணப்பிக்க ஆக., 22 கடைசி**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,00:57 IST

நாமக்கல்: "பால் மற்றும் இறைச்சி பொருள் தயாரிப்பு பற்றிய சான்றிதழ் படிப்புக்கு, ஆகஸ்ட் 22ம் தேதிக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும்' என, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி பால்வள அறிவியல் துறை தலைவர் இளங்கோ தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பால் வள அறிவியல் துறை, இறைச்சியல் துறையும் இணைந்து மதிப்பு கூட்டப்பட்ட பால் மற்றும் இறைச்சி பொருள் தயாரிப்பு பற்றிய சான்றிதழ் படிப்பை துவங்க உள்ளன. அந்த பயிற்சி செப்டம்பர் மாதம் 6ம் தேதி முதல் அக்டோபர் 17ம் தேதி வரை ஆறு வாரம் நடக்க உள்ளது. இப்படிப்புக்கு, 25 பேர் சேர்க்கப்படுவர். சான்றிதழ் படிப்பு ஆறு வாரம் வரை நடத்தப்படும். படிப்பு காலத்தில், பால் மற்றும் இறைச்சியில் உள்ள சத்துக்கள், சுகாதார முறையில் பால் மற்றும் இறைச்சி செய்தல், பதப்படுத்துல், பல்வேறு வகையான மதிப்பு கூட்டப்பட்ட பால் தயாரித்தல், பாதுகாத்தல், பொருளாதாரம், விற்பனை வாய்ப்புகள் போன்ற பல்வேறு பாடம், செயல்முறை விளக்கம் குறித்து தமிழில் கற்றுத்தரப்படும். எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்ச்சி பெற்ற அனைவரும் பயிற்சியில் பங்கேற்கலாம். ஒரு நபர், 2,500 ரூபாய் பயிற்சிக் கட்டணமாக செலுத்த வேண்டும். இருப்பிடம் மற்றும் தங்கும் வசதி கட்டண அடிப்படையில் ஏற்பாடு செய்து தரப்படும். படிப்பில் சேர விரும்புவோர், "தலைவர், பால்வள அறிவியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்' என்ற முகவரிக்கு, 5 ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டிய சுய முகவரியிட்ட தபால் அனுப்பி விண்ணப்ப படிவம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பம் ஆகஸ்ட் மாதம் 22ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலைத் துறை விரிவாக்கப் பணி நடப்பாண்டுக்கு ரூ.19.29 கோடி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,01:09 IST

ஈரோடு: தோட்டக்கலைத்துறை மூலம் பரப்பளவு விரிவாக்கம் மற்றும் பிற வளர்ச்சி பணிக்காக, நடப்பாண்டுக்கு 19.29 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 85 சதவீதம் மத்திய அரசும், 15 சதவீதம் மாநில அரசும் வழங்குகிறது. நடப்பாண்டில், ஈரோடு மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையில் தேசிய தோட்டக்கலை இயக்ககம் மூலம், 3,483 ஹெக்டேர் பரப்பளவு விரிவாக்கப் பணி உள்பட பல்வேறு பணிகளுக்காக, 19.23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், பெருந்தொகையில் விற்பனை வணிக வளாகம் அமைக்கப்படுகிறது. தவிர, 4.73 கோடி ரூபாயில் மா அடர் நடவு, சாதாரண இடைவெளியில் மா நடவு, நெல்லி,

பப்பாளி, எலுமிச்சை, கோகோ சாகுபடி, வாழை, திசுவாழை, சம்பங்கி மலர் சாகுபடி, மிளகாய், மஞ்சள், வெங்காயம், கருமிளகு போன்றவற்றின் சாகுபடி பரப்பளவை விரிவாக்கம் செய்ய மானியம் வழங்கப்படும். கடந்தாண்டு மா, நெல்லி, கோகோ ஆகிய பயிர் நடவு செய்தோருக்கு, பராமரிப்பு மானியம் இத்தொகை மூலம் வழங்கப்படும். பிளாஸ்டிக் மூடாக்கு அமைக்க, தேன் பூச்சி மற்றும் தேனீ பெட்டி வழங்கி தேனீ வளர்ப்பு மானியம், விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி வழங்குதல் போன்றவற்றுக்கு இத்தொகை செலவிடப்படும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், தோட்டக்கலை பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பது. இப்பயிர்களுக்கான மானியத்தொகையில் குறிப்பிட்ட தொகை இடுபொருளாகவும், மீதத்தொகை சாகுபடி பணிக்கு விவசாயிக்கு வழங்கப்படும். கடந்தாண்டு விரிவாக்கப்பணிக்கு 4.35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்குதல் போன்ற பணிக்கு 6.25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ஒன்றேகால் ஏக்கருக்கு மானியம் வழங்கப்படும். தக்காளி, வெண்டை, சுரைக்காய் போன்ற காய்கறிகளுக்கு இந்த மானியத்தொகை வழங்கப்படும்.

**சமையல் எண்ணெய்க்கு கூடுதல் வரி விதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 23,2011,01:18 IST

விருதுநகர் : விருதுநகர் தொழில் வர்த்தக சங்கத்தலைவர் வி.வி.எஸ்.யோகன் கூறுகையில், ""அன்றாடம் பயன்படுத்த கூடிய சமைல் எண்ணெய்க்கு 5 சதம் வரி விதித்துள்ளது. இது சாதாரண மக்களை பாதிக்கும் நிலை உள்ளது. அரிசிக்கு அடுத்தபடியாக அதிகம் பயன்படுத்துவது சமையல் எண்ணெய் தான். மக்களுக்கு சமையல் எண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 5முதல் 6 வரை கூடுதலாக செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். வரி விதிப்பின் காரணமாக வர்த்தக தொழில்துறை பாதிக்கும் நிலை உள்ளது. அரசு எண்ணெய் மீது விதித்துள்ள 5 சதவீத வரியை மறு பரிசீலனை செய்து ரத்து செய்ய வேண்டும்", என்றார்.

தினத் தந்தி

# நடப்பு நிதி ஆண்டில் வேளாண் உற்பத்தி 3–4% அதிகரிக்கும்




இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

இந்தியாவில், நடப்பு நிதி ஆண்டில் வேளாண் உற்பத்தி 3–4 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இது எதிர்பார்ப்புகளைக் காட்டிலும் குறைவானதாக இருக்கும். சென்ற நிதி ஆண்டில் இத்துறையின் உற்பத்தி, முந்தைய ஆண்டைக் காட்டிலும், 6.6 சதவீதம் உயர்ந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டில், ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 24.16 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. மதிப்பீடுகளுக்கு மாறாக உற்பத்தி உயர்ந்திருந்தாலும், அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கருத்தில் கொண்டு உணவு உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் இந்தியாவில் வளர்ச்சி வேகம் குறைவாக உள்ள சில துறைகளில் வேளாண் துறையும் ஒன்றாக உள்ளது.

1972–ஆம் ஆண்டுக்குப் பின் 2009–ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. எனினும் வேளாண் உற்பத்தி வளர்ச்சி விகிதம் 0.4 சதவீதமாக இருந்ததால், மிகப் பெரிய அளவில் உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. இந்நிலையில் சென்ற நிதி ஆண்டில் வேளாண் உற்பத்தி அமோக வளர்ச்சி கண்டுள்ளது. அரிசி, கோதுமை கையிருப்பும் 6.50 கோடி டன் என்ற அளவில் மிகவும் அதிகமாக உள்ளது.

**பஞ்சாப், அரியானா மாநிலங்களில் உணவு தானியங்கள் வீணாகும் அபாயம் கிடங்குகள் பற்றாக்குறையால் சிக்கல்**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*சண்டிகார்*
*சேமிப்பு கிடங்குகள் போதிய அளவு இல்லாததால், பஞ்சாப், அரியானா மாநிலங்களில் உணவு தானியங்கள் வீணாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நம் நாட்டில் தானியங்கள் உற்பத்தியில் இம்மாநிலங்களின் பங்களிப்பு 70 சதவீதமாக உள்ளது.*
*திறந்தவெளியில்...*
*திறந்தவெளியில் கிடக்கும் இந்த உணவு தானியங்களை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பஞ்சாப் மாநிலத்தின் முதல்–அமைச்சர் பிரகாஷ் சிங் பாதலும், அரியானா மாநில உணவு அமைச்சர் மகேந்தர் பிரதாப் சிங்கும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.*
*அரியானா மாநிலத்தில் 45.82 லட்சம் டன் உணவு தானியங்களை சேமிக்கும் வசதி உள்ளது. இந்நிலையில், கோதுமை கையிருப்பு 88.72 லட்சம் டன் உள்ளது. 13.75 லட்சம் டன் அரிசி மற்றும் ஒரு லட்சம் டன் கம்பு ஆகியவை கிடங்குகளில் சேமிக்கப்பட்டுள்ளன.*
*கோரிக்கை*
*இம்மாநிலத்தில் உற்பத்தியாகும் உணவு தானியங்களில் 70 சதவீதம் திறந்த வெளியில் உள்ளது. மத்திய அரசு, இவற்றை உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்ல தவறினால், அவை யாருக்கும் பயன்படாமல் கெட்டுப் போகும் என பிரதாப் சிங் தெரிவித்தார். சேமிப்பு கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசிடம் ரூ.60 கோடி நிதி உதவி கோரியுள்ளார்.*
*நாட்டில் பல லட்சக்கணக்கான ஏழை மக்கள் உண்ண உணவின்றி வாடுகின்ற நிலையில், மத்திய அரசு போதுமான அளவிற்கு ஒத்துழைப்பு அளிக்காததால் பஞ்சாப், அரியானா மாநிலங்களில் நெல், கோதுமை போன்ற உணவு தானியங்கள் வீணாவது வருந்தத்தக்கது என்று பஞ்சாப் மாநிலம் பதேகார் சாகிப் மாவட்டத்தைச் சேர்ந்த சாம்சர் சிங் என்ற விவசாயி கூறினார்.*

*பஞ்சாப் மாநிலம்*

*பஞ்சாப் மாநிலத்தில் 49 லட்சம் டன் உணவு தானியங்களை சேமிப்பதற்கு இடவசதி தேவைப்படும் நிலையில், சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவு 22 லட்சம் டன்னாகத்தான் உள்ளது. இம்மாநில அரசும் சேமிப்பு கிடங்கு வசதியை அதிகரிக்க உதவும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் 2.01 கோடி டன் உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளது.*

*தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் சேமிப்பு கிடங்கு வசதியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்கனவே திட்டமிட்டுள்ளது. இந்த திட்டம் இன்னும் முழுவீச்சில் செயல்படுத்தப்படவில்லை.*

தினகரன்

## கிருஷ்ணகிரியில் இருந்து மும்பைக்கு பறக்கும் மாங்காய் துண்டுகள்

பதிவு செய்த நாள் : 7/23/2011 0:55:38



கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரி பகுதியில உப்பில் ஊறவைத்து தயாராகும் மாங்காய் துண்டுகள் மும்பை மக்களால் விரும்பி சுவைக்கப்படுகிறது. டன் ஸி30 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படும் இந்த மாங்காய் துண்டுகள் மூலம் ஆண்டுக்கு ஸி25 லட்சம் வர்த்தகம் நடைபெறுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எப்போதும் இல்லாத அளவில் இவ்வாண்டு மாங்காய் விளைச்சல் அதிக அளவில்

இருந்தது. அதனால் பெங்களூர் மற்றும் நாட்டு ரக மாங்காய்களின் விலை குறைந்தது.

இந்நிலையில் நாட்டு மாங்காய்களை குறைந்த விலைக்கு வாங்கி அதை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி, உப்பில் ஊறவைத்து பதப்படுத்தி டன் கணக்கில் மும்பைக்கு அனுப்பும் பணியில் கிருஷ்ணகிரி அடுத்த ஆலப்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் இந்த பகுதியில் நாட்டு ரக மாங்காய்களை ஒரு டன் ரூ.3 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை வாங்கி, அதை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி, அதன்மீது உப்பை தூவி காய வைக்கின்றனர். அவ்வாறு ஒரு வாரம் முதல் 10 நாட்கள் வரை காய வைக்கப்படும் மாங்காய் துண்டுகளை டன் ரூ.30 ஆயிரம் வரை மும்பை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் இந்த ஆண்டு சுமார் ரூ.25 லட்சம் வரையில் வர்த்தகம் நடந்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து இந்த தொழிலில் ஈடுபட்டு வரும் கொடுகூர் கிராமத்தை சேர்ந்த அல்தாப் (35) கூறியதாவது: ரகத்திற்கு ஏற்ப ஒரு டன் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரை விற்பனை செய்கிறோம். இதன் மூலம் தினமும் 40 பேருக்கு வேலை கொடுக்கிறோம். 3 மாதம் நடைபெறும் இத்தொழில் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது.
இவ்வாறு நாங்கள் தயார் செய்து அனுப்பும் இந்த மாங்காய் துண்டுகளை, மும்பையில் கூடுதலாக காரம் சேர்த்து, பேக்கிங் செய்து சாப்பிடுவதற்காக விற்பனை செய்கின்றனர். அங்கு மாணவர்களிடையே அதிக வரவேற்பு உள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் அனுப்பும் மாங்காய் துண்டுகளின் அளவு அதிகரித்தவாறு உள்ளது. இவ்வாறு அல்தாப் கூறினார்.